# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# கோயம்புத்தூர் - 641 003

# இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2019-2020

நூற்றாண்டு பழமை வாய்ந்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உலகத்தரம் வாய்ந்த வேளாண் கல்வி புகட்டுவதில் ஒரு முதன்மை நிறுவனம். சிறந்த முறையில் வேளாண் மற்றும் அதைச் சார்ந்த உயர்கல்வி படிப்புகளை வழங்குவது, வேளாண்மை ஆராய்ச்சிகளை மேற்கொள்வது மேலும், இந்திய மற்றும் உலக அளவில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்களுடனும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் இணைந்து தரமிக்க கல்வி வழங்குவது இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவனங்களின் தரமதிப்பீட்டின் படி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்தியாவில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களிலும் **68வது** இடத்தையும், இந்தியப் பல்கலைக்கழக தரவரிசையில் **44வது** இடத்தையும், மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது.

இப்பல்கலைக்கழகம் 2019-2020 ஆம் கல்வியாண்டில் கீழ்க்காணும் 10 பட்டப்படிப்புகளை 14 உறுப்பு மற்றும் 27 இணைப்புக் கல்லூரிகள் மூலம் வழங்குகிறது.

| | |
|---|---|
| 1) இளமறிவியல் (ஹானர்ஸ்) வேளாண்மை | 6) இளம் தொழில் நுட்பம் (வேளாண்மைப் பொறியியல்) |
| 2) இளமறிவியல் (ஹானர்ஸ்) தோட்டக்கலை | 7) இளம் தொழில் நுட்பம் (உயிர் தொழில் நுட்பவியல்) |
| 3) இளமறிவியல் (ஹானர்ஸ்) வனவியல் | 8) இளம் தொழில் நுட்பம் (ஆற்றல் மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல்) |
| 4) இளமறிவியல் (ஹானர்ஸ்) உணவு, ஊட்டச்சத்தியல் மற்றும் உணவு முறையியல் | 9) இளம் தொழில் நுட்பம் (உணவு தொழில் நுட்பம்) |
| 5) இளமறிவியல் (ஹானர்ஸ்) பட்டுவளர்ப்பு | 10) இளமறிவியல் (ஹானர்ஸ்) வேளாண் வணிக மேலாண்மை |

**தேவைகள்:** விண்ணப்பதாரர்கள் i) மேல் நிலைத் தேர்வில் தேவையான பாடங்களை பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ii) 1.7.2019 அன்று 21 வயதிற்கு மிகாமல் இருக்கவேண்டும். (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு வயது வரம்பு இல்லை). iii) தமிழ்நாட்டினை இருப்பிடமாக கொண்டு இருக்க வேண்டும். 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பினை இதர மாநிலங்களில் பயின்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப தகவல் கையேட்டில் உள்ள நிரந்தர இருப்பிட சான்றிதழை (Nativity Certificate) தகுந்த அதிகாரியிடமிருந்து பெற்று சமர்பிக்க வேண்டும். இதர மற்றும் விரிவான சேர்க்கைக்கான தேவைகளை பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் கையேட்டில் (2019-2020) அறியலாம்.

**விண்ணப்பிக்கும் முறை:**விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் http://www.tnau.ac.in/ugadmission.html உள்ள விண்ணப்பத்தினை இணையதள வாயிலாக மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் வினியோகிக்கபடமாட்டாது. இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிப்பதற்கான குறைந்த அளவு வசதிகள் பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்பு மற்றும் இணைப்புக்கல்லூரிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இணையதள வாயிலாக மட்டுமே கலந்தாய்வு நடைபெறும்.**

**முக்கிய தேதிகள்:**

| வ.எண் | விவரம் | தேதி |
|---|---|---|
| 1. | இணையதளத்தில் விண்ணப்பம் பதிவேற்றம் செய்ய துவங்கும் நாள் | 08.05.2019 |
| 2. | இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | 07.06.2019 |
| 3. | விண்ணப்பத்தில் பிழை திருத்தம் செய்ய ( 3 நாட்கள் மட்டும்) | 10.06.2019 to12.06.2019 |
| 4. | சிறப்பு ஒதுக்கீடுக்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு (முன்னாள் ராணுவ வீரர்களின், சுதந்திர போராட்டத் தியாகிகளின் சந்ததியினர், தலை சிறந்த விளையாட்டு வீரர்கள் , மாற்றுத் திறனாளிகள் வெளிநாடு வாழ் இந்தியர் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கான இடஒதுக்கீடு) | 11.06.2019 to13.06.2019 |
| 5. | தரவரிசை பட்டியல் வெளியீடு | 20.06.2019 |

**விண்ணப்பக்கட்டணம் :** விண்ணப்பக் கட்டணத்தினை ,ரூ.600/- (SC/SCA/ST: ரூ.300) இணையதள வாயிலாக விண்ணப்ப படிவத்தில் உள்ள வழிகாட்டி (link) வழியாக செலுத்தலாம்.

**விண்ணப்ப இணையதளம்:** http://www.tnau.ac.in/ugadmission.html

**மேலும் விவரங்களுக்கு:**
தொலைபேசி : 0422-6611345/6611346,
மின்னஞ்சல் : ugadmissions@tnau.ac.in

**முதன்மையர் (வேளாண்மை) மற்றும்**
**தலைவர் மாணவர் சேர்க்கை**